V. GOVERNMENT BILLS.

THE MADRAS STATE HOUSING BOARD BILL, 1960.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg leave to introduce the Madras State Housing Board Bill, 1960.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras State Housing Board Bill, 1960.'

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced

VI. GENERAL DISCUSSION ON THE FIRST SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR THE YEAR 1960-61.

MR. SPEAKER : Now, we shall proceed with the general discussion on the First Supplementary Statement of Expenditure for the year 1960-61.

SRI J. MATHA GOWDER: கனம் சபாநாயகர் அவர்களே இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்திற்குமேல் அதிகமாக ஏற்பட்டிருக்கக்கூடிய தொகைக்கு இன்றைக்கு கனம் நிதி அமைச்சர் அவர்கள் நம்முன் இந்தக் கோரிக்கையை சமர்ப்பித் திருக்கிறார்கள். இது வேறு எந்தக் காரணத்திற்காகவும் நமது சர்க்கார் கொண்டு வரவில்லை. அதிகரித்த செலவிற்கு சபையின் அங்கீகாரம் பெறுகின்ற காரணத்திற்காகத்தான் இதை சமர்ப்பித்திருக்கிறார்கள். இன்றைக்கு சம்பளக் கமிஷன் ரிபோர்ட்டின்படி நமது மாகாணத்தில் இருக்கும் கஜட் பதிவில்லாத ஊழியர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கிற காரணத்தால், இந்த உபமான்யக் கோரிக்கை நம்முன் வந்திருக் கிறது. சம்பள கமிஷன் ரிப்போர்ட் வருவதற்கு முன் நம்முடைய மாகாணத்தின் செலவு எவ்வளவு, சம்பள கமிஷன் ரிபோர்ட் வந்த பிறகு எவ்வளவு செலவு என்று பார்க்க வேண்டும். சம்பள கமிஷன் எந்த அளவுக்குச் சிபார்சு செய்திருக்கிறதோ அந்த அளவிற்கு சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பளம் கொடுத்திருக்கிறது. அதனால் சர்க்காருக்கு ஒவ்வொரு வருஷத் திற்கு 7 கோடி ரூபாய் அதிகமாகச் செலவாகிறது. இது வரவேற்கத்தக்கது. இது மாதிரியாக இந்த மாநிலத்தில் ஏற்படவில்லை. இது முதல் தடவையாக ஏற்படுகிறது.

இந்தச் சம்பள கமிஷன் ரிப்போர்ட் வருவதற்கு முன்பு இந்த மாநிலத்திலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும் ஒரே கண்ணோட்டத்தோடு அதன் விமர்சனத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. கஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்கள் அதிருப்தி அளிக்கக்கூடிய வகையிலே அறிக்கை இருந்தால் அதை வைத்துக் கொண்டு அந்த அளவுக்குச் சர்க்கார் மீது வெறுப்பை